සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

**Department of Samurdhi Development**

කාන්තා, ළමා කටයුතු සහ සමාජ ආරක්ෂණ අමාත්‍යාංශය - සමාජ ආරක්ෂණ අංශය

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு - சமூகபாதுகாப்பு பிரிவு

**Ministry of Women, Child Affairs and Social Security - Social Security Division**


| මගේ අංකය<br>**எனது இல**<br>**My No** | DSD/HO/05/MF/01/சுற்றுநிருபம் | ඔබේ අංකය<br>**உமது இல**<br>**Your No** | ........................................... | දිනය<br>**திகதி**<br>**Date** | 2020.01.31 |
|---|---|---|---|---|---|

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றுநிருப இலக்கம்:- 2020/01

சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி/ வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கும்

**<u>உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் சேகரிக்கப்படும் வட்டி மீதான நிறுத்தி வைத்தல், வரி செலுத்தல் மற்றும் வாக்குறுதிச் சீட்டுக்கள் ஒப்பமிடும் சந்தர்ப்பங்களில் முத்திரைக்கட்டணம் செலுத்தல் தொடர்பாக தெளிவூட்டல்</u>**

**01. அறிமுகம்**

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள்/ வங்கிச் சங்கங்கள் தமது நிதியங்களை முதலீடு செய்வதன் மூலம் (நிலையான/ சேமிப்பு) சம்பாதிக்கும் வட்டி வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நிறுத்தி வைத்தல் வரியினை (Withholding Tax) அறவீடு செய்கின்றது. இது தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் 2019.12.17 ஆம் திகதி SEC/2019/01 இலக்க சுற்றறிக்கை மூலம் புதிய ஆலோசனைகளை வெளியிட்டுள்ளது.

02. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவின் மூலம் வெளியிடப்பட்ட 2018 இலக்கம் 07 சுற்றுநிருபத்தின் முதலாவது இணைப்பின் 02ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கிகள்/ நிதி நிறுவனங்கள் தமது நிதியங்களை முதலீடு செய்வதன் மூலம் சம்பாதிக்கும் வட்டியிலிருந்து நிறுத்தி வைத்தல் வரி விலக்களித்தல் மற்றும் வரி அறவிடல் என்பன கீழ்வருமாறு மேற்கொள்ளப்படவுள்ளன.

I. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தினை கணக்குடையோன் எனக் கருதி அவ் வங்கிச் சங்கத்திடம் இருந்து அவ்வரித் தொகை அறவீடு செய்யப்படும்.

II. சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் ஒவ்வொரு வர்த்தக வங்கி/ நிதி நிறுவனத்திலும் முதலீடு செய்துள்ள நிதியங்களில் இருந்தும் மாதாந்தம் சம்பாதிக்கும் வட்டி ரூபா 250,000/=க்கு குறைவாக இருப்பின் நிறுத்திவைத்தல் வரி அறவிடப்படமாட்டாது.

III. அதற்கு மேலதிகமாக ரூபா 250,000/=க்கு மேற்பட்டு சம்பாதிக்கும் வட்டி வருமானத்திற்கு 5% நிறுத்தி வைத்தல் வரியினை வங்கிகள்/ நிதி நிறுவனங்கள் அறவீடு செய்தல் வேண்டும்.


**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla**

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන)<br>பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்)<br>Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |
| | | **Hot Line :0112-889007** | | | |

IV. மேற்படி பந்தி இலக்கம் III இன் பிரகாரம் மாதாந்தம் வர்த்தக வங்கிகள்/ நிதி நிறுவனங்கள் ஊடாக செலுத்திய நிறுத்தி வைத்தல் வரித்தொகையினை வங்கிச் சங்கம் தமது சமுர்த்தி வங்கிகளின் முதலீட்டுத் தொகைக்கு ஏற்ற விதத்தில் பங்கீடு செய்தல் வேண்டும். இங்கு குறித்த மாதத்தில் அறவீடு செய்யப்பட்ட மொத்த வரித் தொகையினை அம் மாதத்தில் உழைத்துப் பெற்ற வட்டி வருமானத் தொகையினால் பிரித்து ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிக்கும் உரித்தான வட்டித் தொகையினை கணிப்பீடு செய்து அதன் பொருட்டு ஒவ்வொரு சமுர்த்தி வங்கியிடமிருந்தும் வசூலிக்கப்பட்ட நிறுத்தி வைத்தல் வரியின் அளவினையும் கணக்கிட்டு அறிந்துகொள்ளல் வேண்டும்.

(உதாரணம்) மிகுந்துபுர சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் தனக்கு கீழ் இயங்கும் 03 சமுர்த்தி வங்கிகளினதும் நிதியங்களை இலங்கை வங்கியில் கீழ் குறிப்பிடப்படும் விதத்தில் முதலீடு செய்து ஜனவரி மாதத்தினுள் சம்பாதித்த வட்டி வருமானத்தின் அளவு கீழ்வருமாறு அமைந்துள்ளது.

| சமுர்த்தி வங்கி | நிலையான முதலீட்டுத் தொகை (ரூபா) | உழைத்த வட்டி வருமானத் தொகை (ரூபா) |
|---|---|---|
| 1 | 4,000,000.00 | 80,600.00 |
| 2 | 5,000,000.00 | 100,000.00 |
| 3 | 6,000,000.00 | 120,000.00 |
| மொத்தம் | 15,000,000.00 | 300,600.00 |

<u>நிறுத்தி வைத்தல் வரித் தொகை கணிக்கப்படும் முறை</u>

மாதத்தினுள் சம்பாதித்த முதலீட்டு வட்டி வருமானத் தொகை - ரூபா 300,600.00

(-) வரிச் சலுகை - ரூபா 250,000.00

வரிக் கணக்கீட்டுக்கு கவனத்தில் கொள்ளவேண்டிய வட்டித் தொகை ரூபா 50,600.00

5% நிறுத்தி வைத்தல் வரி = $\frac{50,600.00 \times 5}{100}$

ரூபா 2,530.00

ஒவ்வொரு சமுர்த்தி வங்கிக்கும் உரிய நிறுத்தி வைத்தல் வரிச் செலவுத் தொகை.

1வது வங்கி $\frac{\text{ரூபா } 2,530.00 \times 80,600.00}{300,600.00}$ = 678.00

2வது வங்கி $\frac{\text{ரூபா } 2,530.00 \times 100,000.00}{300,600.00}$ = 842.00

3வது வங்கி $\frac{\text{ரூபா } 2,530.00 \times 120,000.00}{300,600.00}$ = 1,010.00

03. மேற்குறிப்பிட்ட பிரகாரம் சமுர்த்தி வங்கிச் சங்கம் மாதாந்தம் உழைக்கும் வட்டி வருமானம் ரூபா 250,000/=தை விட அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் நிறுத்தி வைத்தல் வரியினைக் கணிப்பீடு செய்து சமுர்த்தி வங்கிச் சங்கத்திலிருந்து அறவீடு செய்யப்படும்.

04. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் நிதியம் முதலீடு செய்யப்படும் சந்தர்ப்பங்களில் நிறுத்தி வைத்தல் வரித் தொகையினை கணிப்பீடு செய்யும்போது மேற்குறித்தவாறு சம்பாதித்த வட்டியிலிருந்து வரித்தொகையினை கணிப்பீடு செய்து அதன் குறிப்புக்களை பேணல் வேண்டும்.

05. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளின் அங்கத்தவர்கள் சமுர்த்தி வங்கியில் நிலையான வைப்பின் பொருட்டு முதலீட்டுச் சேமிப்புக்களை மேற்கொண்டிருப்பின் அதற்காக மாதாந்தம் அவர்கள் பெறும் வட்டித் தொகைக்கு ரூபா 250,000.00 வரை வரிச்சலுகை வழங்கமுடியும்.

06. நிறுத்தி வைத்தல் வரி தொடர்பான புதிய ஆலோசனைகள் 2020.01.01ஆம் திகதியிலிருந்து 2020.03.31ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.

07. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள்/ வங்கிச் சங்கங்களினால் கடன் வழங்கும் பொருட்டு பயன்படுத்தப்படும் வாக்குறுதிச் சீட்டுப்படிவங்களுக்கு கீழ்க்குறிப்பிடப்படுமாறு முத்திரைக் கட்டணம் அறவீடு செய்யப்படல் வேண்டும். முதலாவது ரூபா 1000 இற்கு ரூபா 1.00ம் அதற்கு மேலதிகமான ஒவ்வொரு ரூபா 1000இன் பகுதிகளுக்கும் ரூபா 1.00 பெறுமதியான முத்திரைக் கட்டணம் அறவீடு செய்யப்படல் வேண்டும்.

R.P.B திலகசிறி
பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்:

1. செயலாளர், மகளீர் சிறுவர் நடவடிக்கைகள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு - தகவலுக்காக
2. செயலாளர், சமூக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு - தகவலுக்காக
3. சகல மாவட்ட செயலாளர்களுக்கும் - தகவலுக்காக
4. மேலதிக பணிப்பாளர் நாயகம், சமு. அபி. திணைக்களம் - தகவலுக்காக
5. சகல மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்களுக்கும் - தகவலுக்காகவும் உ.ந.பொ
6. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், சமு. அபி. திணைக்களம் - தகவலுக்காக
7. பிரதம கணக்காளர், சமு. அபி. திணைக்களம் - தகவலுக்காக
8. சகல பணிப்பாளர்களுக்கும், சமு. அபி. திணைக்களம் - தகவலுக்காக
9. சகல பிரதேச செயலாளர்களுக்கும் - தகவலுக்காக
10. சகல நிறைவேற்றுச் சபைத் தலைவர்களுக்கும், சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி/ வங்கிச் சங்கம் - தகவலுக்காகவும் உ.ந.பொ
11. சகல கட்டுப்பாட்டுப்பாட்டுச் சபைத் தலைவர்களுக்கும், சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி/ வங்கிச் சங்கம் - தகவலுக்காகவும் உ.ந.பொ

Translated By: I.Aliyar
(Asst. Director)